சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணி – 2009–2010–ஆம் ஆண்டு 7 உதவி செயற்பொறியாளர்களுக்கு செயற்பொறியாளர்களாக தற்காலிக பதவி உயர்வு வழங்கியது – முறைப்படுத்தி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.407 நாள் 24.10.2011

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (பத்தாண்டு) எண்.249, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 21.05.2010.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் நேர்முகக் கடித எண்.45475/2010/எப்.1, நாள் 28.07.2011.

*****

ஆணை:–

தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில், 2009–2010–ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பதவி உயர்விற்கான மதிப்பீட்டுக் காலம் (estimation period) 14/03/2010-உடன் முடிந்துவிட்ட நிலையில், அம்மதிப்பீட்டுக் காலத்தில் ஏற்பட்ட உண்மையான ஏழு பணியிடங்களுக்கு (actual vacancies) உதவி செயற்பொறியாளர்கள் பணியிடத்திலிருந்து, செயற்பொறியாளர்களாக, தமிழ்நாடு நகராட்சிப் பணிகளின் பொது விதிகளின் விதி 8(a)-ன்படி உதவி செயற்பொறியாளர்களுக்கு செயற்பொறியாளர்களாக தற்காலிக பதவி உயர்வு வழங்கி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. தற்போது 2011–2012–ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர்களின் பதவி உயர்விற்கான உதவி செயற்பொறியாளர்களின் தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட வேண்டிய நிலையில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், செயற்பொறியாளர்களாக தற்காலிகமாக பதவி உயர்வு பெற்ற கீழ்க்காணும் தற்காலிக செயற்பொறியாளர்களுக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அளிக்கப்பட்ட பதவி உயர்வை முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | செயற்பொறியாளர்களின் பெயர் |
|---|---|
| | திருவாளர்கள் |
| 1. | ஆர்.சின்னதுரை |
| 2. | ஜி.கருணாகரன் |

| | |
|---|---|
| 3. | ஆர்.இராஜசேகரன் |
| 4. | ஏ.கனகராஜ் |
| 5. | கே.முருகேசன் |
| 6. | எஸ்.கண்ணன் |
| 7. | ஆர்.வாசுதேவன் |

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கருத்தையா பாண்டியன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை– 600 108.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.2) துறை, சென்னை – 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.